Adulteration of milk

* 465 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of the fact that large scale adulteration of milk is carried on by milk vendors in Tiruchirappalli Municipal area; and

(b) if so, the action taken to prevent such adulteration?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி நகராட்சியில் உணவுக் கலப்படத்தடைச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட தேதிகளிலும் முன்னறிவிப்பில்லாமலும் பால் மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறது. பாலில் கலப்படம் செய்பவர்களின் மேல் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்வதன் மூலம், பாலில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு மிகக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. விநயகம் : வெளிக் கிராமங்களில் இருந்து திருச்சி நகரத்திற்குள் பால் கொண்டு வருகிறவர்கள் வீதியில் இருக்கிற குழாய்களில் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு விற்கிறார்கள் என்ற புகார் வந்ததா? அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : வருகிற புகார் எல்லாம் திருச்சி நகரத்தில் உள்ள வீதிக் குழாய்களில் போதுமான தண்ணீர் வரவில்லை என்பதுதான். (சிரிப்பு)

திருவண்ணாமலையில் பஸ் நிலையம்

* 466 வினா.—திரு. பி. எஸ். சந்தானம் : மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் நகராட்சிமன்றம் நடத்தும் பஸ் நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றதா?

(இ) ஆமெனில் அந்த பஸ் நிலையத்திற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

(உ) இந்த ஆண்டு மேலும் ஒரு பஸ் நிலையம் கட்ட சர்க்காரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(எ) இப்பொழுது கட்ட வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கும் நகராட்சிமன்றத்தின் பஸ் நிலையத்தின் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ரூ. 37,071.

(உ) ஆம்.

(எ) ரூ. 4,22,000.

திரு. பி. எஸ். சந்தானம் : சட்டமன்றத் தலைவரவர்களே, முன்னதாகக் கட்டப்பட்ட பஸ் நிலையம் நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. இப்பொழுது தனியார் சௌகரியத்தை